ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අති විසේෂමානතු

අංක 1877/72 - 2014 අගෝස්තු මස 29 වැනි සිකුරාදා - 2014.08.29

*1877/72 ஆம் இலக்கம் - 2014 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 29 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

## பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**கொத்மலை நியம்கம்தொர புராண ரஜ மஹா விஹாரை புனித பிரதேசத்தினை புனித பூமியாகப் பிரகடனப்படுத்தல்**

*இலக்கம் 1681 கொண்ட 2010, நவம்பர் மாதம் 22 ஆம் திகதி, திங்கட்கிழமை அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ள கட்டளை*

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 1681/3 ஆம் இலக்கம் கொண்ட 2010, நவம்பர் மாதம் 22 ஆம் திகதி, திங்கட்கிழமை வெளியிடப்பட்ட அதிவிசேட வர்த்தமானி மூலமாக இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதியுத்தமராம் சனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அவர்களினால் மேற்கொள்ளப்பட்ட அறிவித்தலின் பிரகாரம் கௌரவ பௌத்தசாசன மற்றும் மதவிவகார அமைச்சர் கலாநிதி திசாநாயக்க முதியன்சேலாகே ஜயரத்ன ஆகிய எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கு அமைய கீழே குறிப்பிடப்பட்டுள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள காணியின் நீண்டகால பாதுகாப்புக் கருதி அந்தப் பிரதேசத்தினை புனித பிரதேசமாகவும் அதனை "கொத்மலை நியம்கம்தொர புராண ரஜ மஹா விஹாரை புனித பூமி" என அறிமுகப்படுத்திக்கொள்ள முடியுமெனவும் பிரகடனப்படுத்தப்படுகின்றது.*

*கலாநிதி தி. மு. ஜயரத்ன,*
*பிரதமர், பௌத்தசாசன மற்றும் மதவிவகார அமைச்சர்.*

*பௌத்தசாசன மற்றும் மதவிவகார அமைச்சு,*
*இலக்கம் 135,அநகாரிக்க தர்மபால மாவத்தை,*
*கொழும்பு 07,*
*2014, ஓகத்து 20.*

***அட்டவணை***

*கொத்மலை நியம்கம்தொர புராண ரஜ மஹா விஹாரை புனித பூமி உள்ளடக்கும் பிரதேசம்*

*நிலஅளவையாளர் நாயகத்தின் 2010 நவம்பர்மாதம் 18 ஆம் திகதிய இலக்கம் NU/KTM/2010/202 கொண்ட ஆரம்பவரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ள மத்தியமாகாணத்தில், நுவரெலியா நிருவாக மாவட்டத்தில், உடபனே சிறுபிரிவில், நியம்கம்தொர கிராமத்தில் அமைந்துள்ள கீழ் குறிப்பிடப்படும் I ஆம் பகுதி மற்றும் II ஆம் பகுதிகளில் குறிப்பிடப்பட்டுள்ள 0.7672 ஹெக்டேயார் பரப்பளவு கொண்ட கீழ் குறிப்பிடப்படும் எல்லைகளைக் கொண்ட முழுப் பிரதேசம்.*

*I ஆம் பகுதி*

**துண்டு இலக்கம் *1*:**

*வடக்கு : பாதை (வீ.அ.ச), ஓடை மற்றும் பௌத்த விஹாரைக்குரிய வயல்;*

*கிழக்கு : ஓடை மற்றும் பௌத்த விஹாரைக்குரிய வயல், ஓடை மற்றும் பௌத்த விஹாரைக்குரிய காணி;*

*தெற்கு : ஓடை மற்றும் பாதை (வீ. அ. ச);*

*மேற்கு : பாதை (வீ.அ.ச) மற்றும் ஓடை.*

*இவ் அதி விசேட வர்த்தமானியை www.documents.gov.lk என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

II ஆம் பகுதி

**துண்டு இலக்கம் *2*:**

வடக்கு : ஓடை;
கிழக்கு : ஓடை;
தெற்கு : ஓடை;
மேற்கு : துண்டு இலக்கம் *1*.

*09-495*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.*